# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | இஸ்லாம் | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:............................................................................ | 16 | T | I |

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி – I

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. இஸ்லாத்தின் நம்பிக்கை தொடர்பான கற்கைக்கு வழங்கப்படும் பெயர்
   1. இல்முல்மீராஸ் 2. இல்முல்அகாயித் 3. இல்முல்ஜினாயத் 4. தஸ்கியா
2. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைகின்ற மூலாதாரங்கள்
   1. அல்குர்ஆன் 2. அல்ஹதீஸ்
   3. இஜ்மா 4. அல்குர்ஆனும் ஹதீஸீம்
3. சாதாரண நஜீஸிற்கு உதாரணமாக அமைவது
   1. இரத்தம் 2. நாய்
   3. பன்றி 4. இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்
4. இபாதத் என்ற பதத்தின் கருத்தாக அமையாதது
   1. வணங்குதல் 2. வழிபடல் 3. விசுவாசம் 4. கீழ்ப்படிதல்
5. ''தஸ்கியா'' என்பதன் மொழிக்கருத்து யாது?
   1. அல்குர்ஆனை ஓதுதல் 2. வணங்குதல்
   3. உளப்பரிசுத்தம் 4. அல்லாஹ்வை நினைவுபடுத்தல்
6. பேணுதல் என்ற சொல்லைக் குறிக்கும் அறபு மொழிப்பதம்
   1. ஸீஹ்த் 2. வர.ஃ. 3. தவ்பா 4. இஹ்லாஸ்
7. முதன்முதல் அருளப்பட்ட அல்குர்ஆன் வசனம் இறக்கப்பட்ட சூறா
   1. அர் அலக் 2. அல் கஹ்ப் 3. அல் பலக் 4. அல் பகறா
8. பித்ரா நிறைவேற்றப்பட வேண்டிய நாள்
   1. ஸவ்வால் 1 2. துல்ஹஜ் 10 3. ரஜப் 27 4. றமழான் 2

kalvi.lk

9. தயமுமின் உறுப்புக்கள் எவை?

1. முகமும் இருகைகளும்
2. முகம், தலை, இரு கைகள்
3. முகமும் இரு கால்களும்
4. முகமும் தலையும்

10. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முதன் முதலில் எழுதியவர்

1. இப்னுஹல்தூம்
2. இப்னுஹிஸாம்
3. இப்னுஇஸ்ஹாக்
4. இப்னுஹல்லிஹான்

11. சுன்னத்தான நோன்புகளில் ஒன்று

1. ரமழான் நோன்பு 2. கழா நோன்பு 3. அரபா நோன்பு 4. கப்பாரா நோன்பு

12. பூமியை வளப்படுத்தும் செயற்பாடு

1. இமாரத் 2.கிலாபத் 3. த.ஃ.வத் 4. ரிஸாலத்

13. கலீபா அபூபக்ர் (ரழி) யின் ஆலோசனைப்படி அல்குர்ஆனைத் தொகுக்கும் பணியை மேற்கொண்ட நபித் தோழர்

1. இப்னு இப்பாஸ்
2. ஸைத் பின் ஸாபித்
3. மு ஆத் இப்னு ஜபல் (ரழி)
4. இப்னு மஸ் ஊத் (ரழி)

14. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அரபு நாட்டின் கிழக்கு எல்லை எது?

1.ஸிரியாப் பாலைவனம் 2.அரபுக்கடல் 3.பாரசீக வளைகுடா 4.செங்கடல்

15. இஸ்லாத்தின் இரண்டாவது புனிதத்துவம் பெற்ற மஸ்ஜிதாக இமைவது?

1. மஸ்ஜிதுல் ஹராம்
2. மஸ்ஜின் நபவி
3. மஸ்ஜிதுல் அக்சா
4. மஸ்ஜிதுல் குபா

16. மது அருந்தியவருக்கு இஸ்லாம் வழங்கிய தண்டணை?

1. 10கசையடி 2. 40கசையடி 3. 50கசையடி 4. 80கசையடி

17. அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவராக கருதப்படும் நபித்தோழர்?

1. இனஸ் (ரழி) 2. தல்ஹா (ரழி) 3. உமர் (ரழி) 4. அபூஹீரைரர் (ரழி)

18. அலி (ரழி) அவர்களை கொலை செய்த காரிஜி யார்?

1. அபுல் லூலு 2.இப்னுமுல்ஜிம் 3. இப்னு அரபி 4. முகீரா

19. ‘‘துன்னூரைன்’’ எனும் சிறப்பு பெயர் கொண்டு அழைக்கப்பட்ட ஸஹாபி?

1. உமர் (ரழி) 2. அபூகுரைரா (ரழி) 3. உஸ்மான் (ரழி) 4. பிலால் (ரழி)

20. ”இமாமுல் அ.ஃலம்’’’ எனும் சிறப்பு பெயரால் அழைக்கப்பட்ட இமாம்?

1. இமாம் அபூஹனிபா
2. இமாம் ஸாபி
3. இமாம் மாலிக்
4. இமாம் ஹன்பால்

21. ”கழாகத்ர்’’ மீது அவ நம்பிக்கை கொள்பவனின் நிலை?

1. பாஸிக் 2. முர்தத் 3. முனாபிக் 4. காபிர்

22. ”இவ் உலக வாழ்வு வேடிக்கையும் விளையாட்டுமாகும் நிச்சையமாக மறுமை வாழ்வே நிலையானது ஆகும்’’ எனும் கூற்று?

1. அல்குர்ஆன் 2. அல்ஹதீஸ் 3. ஸஹாபாக்களுடையது 4. இமாம்களுடையது

23. வெள்ளிக்கிழமை ஜீம் ஆத் தொழுகையில் பங்குபெற்றுவதற்காக குளித்து சுத்தம் செய்து கொள்வது?

1. விருப்பத்தக்கது 2. சுன்னத் 3. முபாஹ் 4. கட்டாயம்

24. உம்ரா வணக்கத்தில் பர்னுகளில் அடங்காதது?

1. தவாய் 2. முடி வெட்டுதல் 3. ஸஃயு செய்தல் 4. ஜம்ராக்களில் கல்எறிதல்

25. அஹ்லுல் பைத் எனப்படுவோர்

1. நபிகளாரது மனைவியர் 2. நபிகளாரது குடும்பத்தினர்
3. ஸஹாபிப் பெண்மணிகள் 4. திண்ணத் தோழர்கள்

26. உமர் (ரழி) அவர்கள் இஸ்லாமிய கிலாபத்தைப் பொறுப்பேற்ற ஆண்டு?

1. ஹிஜ்ரி 11 2. ஹிஜ்ரி 23 3. ஹிஜ்ரி 35 4. ஹிஜ்ரி 13

27. மாலிக் மத்ஹபை அரச மத்ஹபாக பிரகடனப்படுத்திய ஸ்பைன் ஆட்சியாளர்?

1. இரண்டாம் ஹக்கம் 2. மூன்றாம் அப்துர் ரஹ்மான்
3. இப்னு கிஸாம் 4. முதலாம் அப்துர்ரஹ்மான்.

28.இமாம் மூவர் தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

| பிறப்பிடம் | மறைந்த ஆண்டு |
|---|---|
| A- நஸா | D - ஹி : 273 |
| B- கஸ்வின் | E - ஹி : 275 |
| C- ஸிஜிஸ்தான் | F - ஹி : 303 |

மேற்படி விடயத்தில் இப்னு மாஜா (ரஹ்) வுடன் தொடர்பான விடயங்கள்

1. A- F 2. B - E 3. B - D 4. C - D

29.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1.முழாரபா | A - விவாகம் |
| 2.தலாக் | B - ஹஜ், உம்ரா |
| 3.ஸஃயு | C - சட்ட மூலாதாரம் |
| 4.கியாஸ் | D - வியாபாரம் |

மேலே நிரல் ''X'' இன் கீழுள்ள ஒவ்வொரு சொற்களுடனும் தொடர்புறும் விதத்தில் நிரல் Y இல் உள்ளவற்றை ஒழுங்கமைத்ததால் பெறப்படும் சரியான ஒழுங்கு வரிசை

1. ADCB 2. BCDA 3. CDBA 4. DABC

30. ''நீண்ட கை உடையவர்'' எனும் சிறப்புப் பெயர் பெற்ற உம்மஹாதுல் முஃமினீன்

1. கதீஜா (ரழி) 2. ஸைனப் டின் ஜஹ்ஷ் (ரழி)
3. சவ்தா (ரழி) 4. ஆயிசா (ரழி)

31. இஸ்லாமிய கிலாபத் முறை ஒழிக்கப்பட்ட வருடம்

1. கி.பி 1528 2. கி.பி 1257 3. கி.பி 1924 4. கி.பி 1517

32. ரமழான் மாதத்தில் மாத்திரம் நிறைவேற்றும் விசேட சுன்னத்தான தொழுகை

1. தஸ்பீஹ் தொழுகை 2. தராவீஹ் தொழுகை
3. வித்ர் தொழுகை 4. தஹஜ்ஜுத் தொழுகை

33. பத்ர் யுத்தத்தில் பங்குபற்றிய முஸ்லிம்களின் எண்ணிக்கை

1. 313 2. 700 3. 800 4. 3130

34. ''தீவானுல் பரீத்'' எனப்படும் தபால் திணைக்களத்தை நிறுவிய கலீபா

1. அபூபக்ர் (ரழி) 2. அலி (ரழி) 3. உமர் (ரழி) 4. முஆவியா (ரழி)

kalvi.lk

35. முஸ்லிம்களினால் இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போக்குவரத்துறை முறை

1. தவளம் முறை 2. மரக்கலம் முறை 3. குதிரைப்பயணம் 4. கரவான் முறை

36. மனதில் குப்ரை மறைத்துக் கொண்டு வெளியில் இஸ்லாத்தைக் காட்டும் செயல்

1. சிர்க் 2. நிபாக் 3. ரித்தத் 4. குப்ர்

37. தற்போதைய ஹிஜ்ரி ஆண்டு

1. 1439 2. 1440 3. 1441 4. 1442

38. ''புதூஹுல் புல்தான்'' எனும் நூலின் ஆசிரியர்

1. இப்னுசஹ்ரயார் 2. இப்னுல் அரபி 3. இப்னு ஹிசாம் 4. அல்பலாதூரி

39. கர்ப்பிணிப் பெண் ஒருவர் இத்தா இருக்க வேண்டிய கால அளவு

1. 4மாதமும் 10 நாட்களும் 2. 3மாதங்கள்
3. 40நாட்கள் 4. குழந்தை பிறக்கும் வரை

40. மக்னா காட்டா உடன்படிக்கை இடம்பெற்ற ஆண்டு

1. 1210 2. 1215 3. 1230 4. 1232

Education கல்வி අධ්‍යාපන

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | இஸ்லாம் | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:.................................................................................. | 16 | T | II |

**கவனிக்க:**

I.முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட எனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி II

**01.**

1. அர்- ரிஸலாத் என்பதன் பொருள் யாது?
2. வழிகெட்ட அகீதாசார் சிந்தனைப் பிரிவுகள் இரண்டினைக் குறிப்பிடுக?
3. போலி நபிமார்கள் நால்வரின் பெயர்களைத் தருக?
4. செல்வத்தோடு தொடர்பான இபாதத்தக்கள் இரண்டினைத் தருக?
5. விதியை நம்புவதால் ஏற்படும் பயன்கள் இரண்டினைத் தருக?
6. ஹஜ்ஜீக்கும் உம்றாக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைத் தருக?
7. நோன்பு நோற்க தடை செய்யப்பட்ட நாட்கள் இரண்டை தருக?
8. ஸப்ர், தவக்குல் என்பவற்றின் பொருளை எழுதுக?
9. ஸகாத்தின் பர்ளுகள் எவை?
10. அன்பு வைத்தலின் 02 பிரிவுகளும் யாவை?

(10X2 = 20புள்ளி)

**02.**

1. மு.:.ஜிஸாத் என்றால் என்ன?
2. ரஸீசல்மார்களுக்குக் கிடைக்கப் பெற்ற அற்புதங்கள் மூன்றைக் குறிப்பிடுக?
3. அல்குர் ஆனின் அறிவியல் அற்புதங்கள் ஐந்தை எழுதுக?

(2+3+5 = 10புள்ளி)

**03.**

1. இஜமா, கியாஸ் அல்லாத துணை மூலாதாரங்கள் இரண்டு தருக?
2. கியாஸை ஒரு சட்ட மூலாதாரமாகக் கொள்வதற்கான ஆதாரங்கள் மூன்று தருக?
3. அர்கானுல் கியாலை விளக்கி எழுதுக?

(2+3+5 = 10புள்ளி)

**04.**

1. பிரயாணத்தின் போது தொழுகையில் வழங்கப்பட்ட 02 சலுகைகளை குறிப்பிடுக?
2. ஸகாத்தை கூட்டாக நிறைவேற்றுவதால் கிடைக்கும் பயன்கன் 3 தருக?
3. பர்ளான தொழுகையைத் தொடர்ந்து ஓத வோண்டிய ஓதல்கள்?

(2+3+5 = 10புள்ளி)

**05.**

1. நற்பண்பைக் குறிக்கும் பதங்கள் இரன்டைத் தருக?
2. தவக்குல் வைக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் மூன்றை குறிப்பிடுக?
3. பொறுமையின் வடிவங்களைக் குறிப்பிட்டு விளக்குக?

(2+3+5 = 10புள்ளி)

**06.**

1.ஸீசன்னா என்றால் என்ன?

2. நபியவர்களின் காலத்தில் ஹதீஸ்களைப் பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் 3ஐ குறிப்பிடுக?
3. அஸ்ஸிஹாஹுஸீஸ்ஸித்தாவில் இடம் பெறும் ஹதீஸ் நூல்கள் ஆறையும் குறிப்பிடுக?

(2+3+5 = 10புள்ளி)

**07.**

1. அல்குலபா உறாஸிதூன் என்றால் யார்?
2. அபூபக்ர் (ரழி) யின் ஆட்சிக்கால சேவைகள் 3ஐ குறிப்பிடுக?
3. உமர் (ரழி) யின் ஆட்சியின் போது நிர்வாகப் பணிகளை இலகுபடுத்துவதற்காக ஏற்படுத்திய பதவிகள் எவை?

(2+3+5 = 10புள்ளி)

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2019

## இஸ்லாம் தரம் - 11

## (புள்ளித்திட்டம்)

## பகுதி - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 3 | 21. 4 | 31. 3 |
| 2. 4 | 12. 1 | 22. 1 | 32. 2 |
| 3. 1 | 13. 2 | 23. 2 | 33. 1 |
| 4. 3 | 14. 3 | 24. 4 | 34. 3 |
| 5. 3 | 15. 2 | 25. 2 | 35. 1 |
| 6. 2 | 16. 2 | 26. 4 | 36. 2 |
| 7. 1 | 17. 4 | 27. 1 | 37. 2 |
| 8. 1 | 18. 2 | 28. 3 | 38. 4 |
| 9. 1 | 19. 3 | 29. 4 | 39. 4 |
| 10. 2 | 20. 1 | 30. 2 | 40. 2 |

Education கல்வி அධ්‍යාපන

## பகுதிII (விடைகள்)

**01.**

1. தூதுத்துவம்
2. கதரிய்யா, ஜபரிய்யா, முர்ஜிஆ, மு∴தஸிலா
3. முஸைலமா, துலைஹா, அஸ்வதுல் அன்ஸி, ஸஜாஹ்
4. ஸகாத், ஸதகா, உழ்ஹிய்யா
5. திருப்தியான மனம்
   பொறுமை காத்தல்
   விரக்தி அடையாதிருத்தல்
6.

| | <u>ஹஜ்</u> | <u>உம்றா</u> |
|---|---|---|
| 1. | கட்டாயமானது | சுன்னதானது |
| 2. | கட்டாயம் அரபாவில் தரித்தல் | அரபாவில் தரிப்பதில்லை |
| 3. | குறிப்பிட்ட காலம் (துல்ஹஜ் 8-13) | எக்காலமும் நிறைவேற்றலாம் |

7. இரு பெருநாட்கள், அய்யாமுத் தஷ்ரீக், சந்தேகத்துக்குரிய நாட்கள்

8. ஸப்ர் - பொறுமை, தவக்குல் - பொறுப்புச் சாட்டுதல்

9. நிய்யத்து வைத்தல், தகுதியானவர்களுக்கு வழங்குதல்

10. I. அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல்

II. படைப்பினங்கள் மீது அன்பு வைத்தல்

(20புள்ளி)

**02.**

1. நுபுவத்தை உறுதிப்படுத்துவதற்காக நபிமார்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட அற்புதங்கள்

2. கைத்தடி பாம்பாக மாறுதல், கை பளபளத்தல், நெருப்பு குளிராக மாறியமை, அல்குர் ஆன் வழங்கப்பட்டமை

3. முறியடிக்க முடியாத சவாலாக குர்ஆன் அமைந்துள்ளமை

சிசு உருவாக்கம் பற்றிய குர்ஆனின் கருத்தை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியமை.

தேனீ பற்றிய கருத்து

பூமியின் மேலே செல்லச் செல்ல ஒட்சிசனின் அடர்த்தி குறைந்து வருகின்றது என்ற விஞ்ஞானிகளின் கருத்தை குர்ஆன் குறிப்பிட்டுள்ளமை

உரோம தேசம் வெற்றி கொள்ளப்படும் என்ற குர்ஆனின் எதிர்வு கூறல்.

(2+3+5 = 10புள்ளி)

**03.**

1. இஸ்திஹ்ஸான், கவ்லுஸ்ஸஹாபா, உர்பு, மஸ்லஹாமுர்ஸலா

2. ''ஹஜ் கடமையான நிலையில் மரணித்த தந்தைக்காக ஹஜ் செய்வதை கடனைச் செலுத்துவதற்கு ஒப்பிட்டமை.

நபியவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அபூபக்ர் (ரழி) அவர்கள் தொழுகையை இமாமாக நின்று நடத்தியமையை ஒப்பிட்டு அவர்களைக் கலீபாவாகத் தெரிவு செய்தமை.

மதுபானத்தை ஏனைய போதைப்பொருட்களுடன் ஒப்பிடுகின்றமை.

3. அல்அஸ்ல் :- ஏற்கனவே தீர்வு சொல்லப்பட்ட பிரச்சினை

அல்பர்உ :- அல்குர்ஆனிலோ, சுன்னாவிலோ இஜ்மாவிலோ தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை

அல்இல்லத் :- இரு பிரச்சினைகளுக்கும் இடையில் அவதானிக்கப்படும் பொதுப்பண்பு அல்லது பொதுக்காரணி

அல்ஹுக்ம் :- அல்குர்ஆனில் அல்லது ஸுன்னாவில் முன்வைக்கப்பட்ட தீர்வு

(2+3+5 = 10புள்ளி)

**04.**

1. அல்ஹஸ்ர்

   வல்ஜம்ஊ

2. ஏழைகளின் சுயமரியாதை பாதுகாக்கப்படுகின்றது.

   ஸக்காத் கடமையிலிருந்து செல்வந்தர்கள் யாரும் நழுவிவிடாதிருக்க இது வழி செய்கின்றது.

   சமூக நலனைப் பாதுகாக்கும் பணிகளிலும் கவனம் செலுத்த முடியும்.

3. அஸ்த.்.பிர்லாஹ் 3தடவை

   அல்லாஹுசம்ம அன்தஸலாம்............

   கலீமா தொஹீத்..................

   சுப்ஹானல்லாஹ் 33, அல்ஹம்துவில்லாஹ் 33, அல்லாஹு அக்பர் 33 தடவை

   ஆயத்துல் குர்ஸி

(2+3+5 = 10புள்ளி)

**05.**

1. மஹாரிமுல் அஹ்லாக், அதப், குலுக்ஹஸன்

2. வீட்டை விட்டு வெளியேறும் போது

   தொழில் முயற்சியில் ஈடுபடும் போது

   கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது

   எதிரியை எதிர் கொள்ளும் போது

   தூங்கச் செல்லும் போது

3. கோபத்தின் போது - அடக்கிக் கொள்ளல்

   பேராசையின் போது - போதுமாக்கிக் கொள்ளல்

   சோதனையின் போது - தாங்கிக் கொள்ளல்

   துக்கம் வரும் போது - சகித்துக் கொள்ளல்

   சோர்வு ஏற்படும் போது - திட உறுதியாய் நிற்றல்

(2+3+5 = 10புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

**06.**

1. நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரங்கள், வர்ணனைகள் ஹதீஸ் எனப்படும்.

2. ஹதீஸ்களை திருத்தமாக மனனமிடச் செய்தமையும் எழுதியமையும்

   ஹதீஸ் கற்றல் - கற்பித்தலில் சில ஸஹாபாக்களை பயன்படுத்தியமை

   பொய்யான ஹதீஸ்களை கூறுபவர்களை நரகத்தைக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் எச்சரித்தமை

3. ஸஹீஹ் புஹாரி

   ஸஹீஹ் முஸ்லிம்

   ஜாமிஉத் திர்மிதி

   ஸுனன் அபூதாவூத்

   ஸுனன் நஸா ஈ

   ஸுனன் இப்னுமாஜா

(2+3+5 = 10புள்ளிகள்)

**07.**

1 .நரி (ஸல்) அவர்களுக்கு பின் ஆட்சி செய்த 4 கலீபாக்கள்

2. குர்ஆனைத் தொகுத்து நூலுருப்படுத்தியமை

   போலி நபிமார்களின் சவாலை முறியடித்தமை

   ஸகாத் வழங்க மறுத்த கூட்டத்தின் சூழ்ச்சியை முறியடித்தமை

   நல்லாட்சியைத் தொடர்ந்தமை

3. வாலி - ஆளுநர்

   காதிப் - தலைமைக் காரியதாரி

   காழி - தலைமை நீதிபதி

   ஸாஹிபுல் கராஜ் - இறைவரி அதிகாரி

   காதிபுத்தீவான் - இராணுவ காரியதரிசி

(2+3+5 = 10புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page